போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

OCTOBER 23, 1923.

ந. 18(1).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் வருஷம் அக்டோபர்மீ 23உ. [விலை, 6 பை.

இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்ட்

ACT OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்ட்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் மார்ச்மீ 16உ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XIV OF 1923.

1923-ம் வருஷத்து 14-வது ஆக்ட்.

AN ACT TO PROVIDE FOR THE CREATION OF A FUND FOR THE IMPROVEMENT AND DEVELOPMENT OF THE GROWING, MARKETING AND MANUFACTURE OF COTTON IN INDIA.

இந்தியாவில் பஞ்சு விளைவிப்பதையும் அதை விற்பனை செய்வதையும் அதைக்கொண்டு சாமான்கள் செய்வதையும் சீர்படுத்துவதற்காகவும் விருத்திபண்ணுவதற்காகவும் ஒரு நிதியை ஸ்தாபிக்கும்பொருட்டு நிபந்தனை ஏற்படுத்துவதற்கான ஆக்ட்.

இந்தியாவில் பஞ்சு விளைவிப்பதையும் அதை விற்பனை செய்வதையும் அதைக்கொண்டு சாமான்கள் செய்வதையும் சீர்படுத்துவதற்காகவும் விருத்திபண்ணுவதற்காகவும், இது விஷயமாய்ப் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஒரு கம்மிட்டியார் செலவு செய்யும் பொருட்டு ஒரு நிதியை ஸ்தாபிப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1. (1) இந்த ஆக்டை, 1923-ம் வருஷத்திய இந்துதேசத்து பஞ்சு வரி ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) இது - ஏடன் நீங்கலாக, (ப்ரிடிஷ் பலுசிஸ்தானம் ஸந்தால் பர்கனாக்கள் ஆகிய இவைகளடங்க) ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

(a) ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு (மில்) யந்திரசாலையில் செலவாகும் பஞ்சு விஷயமாய் உபயோகிக்கப்படும்போது, "கலெக்டர்" என்பது - அந்த யந்திரசாலை எந்த டிஸ்ட்ரிக்டில் இருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்டின் கலெக்டர் என்று அர்த்தமாகும்;

(b) "கம்மிட்டி" என்பது - இந்த ஆக்டின்படி அமைக்கப்பட்ட இந்துதேசத்து மத்திய பஞ்சு கம்மிட்டி என்று அர்த்தமாகும்;

(c) "பஞ்சு" என்பது - விதை எடுக்கப்பட்டு, பேல் (bale) என்னும் கட்டுகளாகக் கட்டியோ அல்லது அந்தப்படி கட்டப்படாமல் விடுதியாகவோ இருக்கிற வேலை செய்யப்படாத பஞ்சு என்று அர்த்தமாகும்;

(d) "கஸ்டம் கலெக்டர்", "தீர்வையுள்ள ரேவு" என்பவை - முறையே 1878-ம்௵த்து வீ கஸ்டம் ஆக்ட் 3-வது பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள கஸ்டம் கலெக்டர் என்றும் தீர்வையுள்ள ரேவு என்றும் அர்த்தமாகும்; 1878-ம்௵த்து 8-வது ஆக்ட்.

(e) "யந்திரசாலை" என்பது - இந்து தேசத்து தொழிற்சாலைகளைக் குறித்த 1911-ம்௵த்து ஆக்ட் 2-வது பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள தொழிற்சாலையாயிருந்து, 1896-ம்௵த்து பஞ்சு தீர்வை ஆக்ட் 3-வது பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள பஞ்சு சரக்காக மாற்றப்படுவதற்காகிலும், நூலாகவோ புரியாகவோ விற்பனை செய்யப்படுவதற்காகிலும் அப்படிப்பட்ட நூலாகவோ புரியாகவோ பஞ்சு மாற்றப்படுகிற யாதொரு இடமென்று அர்த்தமாகும்; 1911-ம்௵த்து 12-வது ஆக்ட். 1896-ம்௵த்து 2-வது ஆக்ட்.

(f) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளினால் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும்.

பஞ்சு வரி விதிப்பது.

3. இந்தியாவில் உற்பத்தியாகி, யாதொரு தீர்வையுள்ள ரேவிலிருந்து ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியிலுள்ள யாதொரு ரேவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற அல்லது ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு யந்திரசாலையில் உபயோகிக்கப்படுகிற சகல பஞ்சுக்கும், அவார்டுபாய் எடைப்படி நானூறு பவுண்ட் கொண்ட ஸ்டாண்டர்ட் (பரிமாண) பேல் ஒன்றுக்கு இரண்டணா வீதமும், பேலாகக் கட்டப்பட்டிராத பஞ்சின் விஷயத்தில் நூறு அவார்டுபாய் பவுண்டுக்கு ஆறு தம்பிடி வீதமும் (ஸெஸ்) வரி ஒன்று விதித்து வசூலிக்கப்படும்:

ஆனால், ஷை வரியானது - இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கினதிலிருந்து மூன்று வருஷம் கழிகிறவரையில் ஷை வீதங்களுக்கு இரண்டத்தனையாக விதித்து வசூலிக்கப்படும்.

இந்துதேசத்து மத்திய பஞ்சு கம்மிட்டியை அமைப்பது.

4. இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கின பிறகு கூடுமான சீக்கிரத்தில், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - அடியிற்கண்ட மெம்பர்களடங்கிய கம்மிட்டி ஒன்றை அமைக்கும்படிச் செய்யவேண்டும்; அந்த மெம்பர்கள் யாரென்றால்:—

(i) இந்தியா கவர்ன்மெண்டுக்கு விவசாய விஷயங்களில் ஆலோசனை சொல்லும் அக்ரிகல்சரல் அட்வைஸர் என்னும் உத்தியோகஸ்தர்;

(ii) முறையே சென்னபட்டணம், பம்பாய், யுனைடெட் ப்ராவின்ஸெஸ் என்னும் ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப், மத்திய மாகாணங்கள், பர்மா ஆகிய இவைகளின் பிரதேச கவர்ன்மெண்டுகளைச் சேர்ந்த விவசாய இலாகாக்களின் பிரதிநிதிகளாய், அந்தந்த பிரதேச கவர்ன்மெண்டாரால் நேமகம் செய்யப்பட்ட ஆறு நபர்கள்;

(iii) கமெர்ஷியல் இன்டெலிஜென்ஸ் டைரெக்டர் ஜெனரல் என்னும் உத்தியோகஸ்தர்;

(iv) முறையே ஈஸ்ட் இந்தியா காட்டன் அஸோஸியேஷன் என்னும் சங்கத்தாராலும், பம்பாய் மில் ஓனர்ஸ் அஸோஸியேஷன் என்னும் சங்கத்தாராலும், பம்பாய் சேம்பர் ஆவ் காமெர்ஸ் என்னும் வர்த்தக சங்கத்தாராலும், பம்பாயிலுள்ள இந்தியன் மெர்ச்சன்ட்ஸ் சேம்பர் என்னும் இந்திய வர்த்தக சங்கத்தாராலும், காரச்சி சேம்பர் ஆவ் காமெர்ஸ் என்னும் வர்த்தக சங்கத்தாராலும், ஆமதாபாத் மில் ஓனர்ஸ் அஸோஸியேஷன் என்னும் சங்கத்தாராலும், தூத்துக்குடி சேம்பர் ஆவ் காமெர்ஸ் என்னும் வர்த்தக சங்கத்தாராலும், அப்பர் இந்தியா சேம்பர் ஆவ் காமெர்ஸ் என்னும் வர்த்தக சங்கத்தாராலும், எம்பையர் காட்டன் க்ரோயிங் கார்ப்போரேஷன் என்னும் சபையாராலும் நேமகம் செய்யப்பட்ட ஒன்பது நபர்கள்;

(v) பஞ்சு சாமான்கள் செய்யும் அல்லது பஞ்சிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் கைத்தொழில் செய்பவர்களுக்குப் பிரதிநிதிகளாயிருக்கும் நான்கு நபர்கள்; இவர்களில் இரண்டு பேர் மத்திய மாகாணங்களின் பிரதேச கவர்ன்மெண்டாராலும், ஒவ்வொருவர் சென்னபட்டணம், பஞ்சாப் ஆகிய இவைகளின் பிரதேச கவர்ன்மெண்டாராலும் நேமகம் செய்யப்படவேண்டும்;

(vi) வங்காளப் பிரதேச கவர்ன்மென்டாரால் நேமகம் செய்யப்பட்ட ஒரு நபர் ;

(vii) கூட்டுத்தொழில் முறைப்படி பாங்கிங் (பண லேவாதேவி) வேலை நடத்தத் தெரிந்தவராய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் நேமகம் செய்யப்பட்ட ஒரு நபர் ;

(viii) சென்னபட்டணம், பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாப், மத்திய மாகாணங்கள்-பேரார் ஆகிய இவைகளில் பஞ்சு விளைவிக்கும் தொழில் செய்பவர்களுக்குப் பிரதிநிதிகளாயிருக்கும் பத்து நபர்கள் ; இவர்களில் இரண்டு பேர் அந்த மாகாணங்களின் பிரதேச கவர்ன்மென்டுகள் ஒவ்வொன்றினாலும் நேமகம் செய்யப்படவேண்டும் ;

(ix) முறையே ஹைதராபாத் சமஸ்தானத்தின் அதிமேன்மை பொருந்திய நைஜாம் அவர்களுடைய கவர்ன்மென்டாராலும், பரோடா சமஸ்தானத்தின் தர்பாராலும், க்வாலியர் சமஸ்தானத்தின் தர்பாராலும் நேமகம் செய்யப்பட்ட மூன்று நபர்கள் ;

(x) ராஜபுதனத்திலும் மத்திய இந்தியாவிலுமுள்ள இந்திய சமஸ்தானங்களின் தர்பார்களால் கூட்டாய் நேமகம் செய்யப்பட்ட ஒரு நபர் ;

(xi) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பர மூலமாய் நியமிக்கக்கூடிய அதிகப்படியான நபர்கள் :

ஆனால், யாதொரு அதிகார சபையாராவது வேறே நபராவது இந்த பிரிவின்படி யாதொரு நேமகம் செய்ய பாத்தியதை ஏற்பட்டிருந்து அவர்கள் அல்லது அவர் இது விஷயமாய் நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் அந்தப்படி நேமகம் செய்யத் தவறிப்போனால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - பிரஸ்தாப காலிஸ்தானம் அல்லது காலிஸ்தானங்களைப் பூர்த்தி செய்வதற்காக சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஒரு மெம்பரையாகிலும் (பல) மெம்பர்களையாகிலும் தாமே நியமிக்கலாம்.

ஷை கம்மிட்டி சட்டப்படி சேர்ந்த சபையாவது.

5. (1) மேலேகண்டபடி அமைக்கப்பட்ட கம்மிட்டியானது - இந்துதேசத்து மத்திய பஞ்சு கம்மிட்டி என்னும் பெயரால் சட்டப்படி சேர்ந்த ஒரு சபையாகும் ; மேலும், அந்தக் கம்மிட்டியார் - இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்துகொண்டு, பொதுவான முத்திரையுடையவர்களாயும் அசையும் பொருள் அசையாப்பொருள் ஆகிய இருவகைப் பொருளையும் அடையவும் வைத்திருக்கவும் ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும் அதிகாரமுடையவர்களாயுமிருப்பது மல்லாமல், அந்தப் பெயரால் பிறர்மேல் வியாஜ்ஜியம் தொடரக்கூடியவர்களாயும் பிறர் தங்கள்மேல் வியாஜ்ஜியம் தொடரக்கூடியவர்களாயும் இருப்பார்கள்.

(2) இந்தியா கவர்ன்மென்டைச் சேர்ந்த அக்ரிகல்சுரல் அட்வைஸர் என்னும் உத்தியோகஸ்தர் - உத்தியோக முறைமையில் அந்தக் கம்மிட்டியின் ப்ரெஸிடென்டாய் (அக்கிராசனாதிபதியாய்) இருக்கவேண்டும்.

(3) ஷை கம்மிட்டியின் ஸெக்ரெடரி (காரியதரிசி) யானவர் - அந்தக் கம்மிட்டியின் மெம்பராயிராமல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் நியமிக்கப்பட்ட நபராயிருக்கவேண்டும்.

மாதாந்த ரிடர்ன்கள் கொடுப்பது.

6. (1) ஒவ்வொரு யந்திரசாலையின் சொந்தக்காரரும் - முந்திய மாதத்தில் யந்திரசாலையிலே உபயோகிக்கப்பட்ட அல்லது செய்முறைக்குக் கொண்டுவரப்பட்ட பஞ்சின் மொத்த அளவைக் கண்டு ஒரு ரிடர்ன் என்னும் விவரக்கணக்கை அது விஷயமாக நிர்ணயிக்கப்படக்கூடிய பின்னும் சங்கதி சஹிதமாய் ஒவ்வொரு மாதத்திலும் ஏழாம் தேதியன்றைக்காவது அதற்கு முன்பாவது கலெக்டருக்குச் சவதரிக்கவேண்டும் :

ஆனால், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் உபயோகிக்கப்பட்ட அல்லது செய்முறைக்குக் கொண்டுவரப்பட்ட பஞ்சின் விஷயமாய் ரிடர்ன் அனுப்பும்படி கேட்கக்கூடாது.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு ரிடர்னையும் நிர்ணயிக்கப்படக்கூடிய நமூனாப்படி தயாரிக்கவேண்டியதுமல்லாமல், நிர்ணயிக்கப்படக்கூடிய விதமாக சரியானதென்று அதில் உறுதிமொழி எழுதியும் அனுப்பவேண்டும்.

கலெக்டர் வரி வசூல் செய்வது.

7. (1) 6-வது பிரிவின்படி தயாரித்து அனுப்பப்பட்ட யாதொரு ரிடர்னை வரப்பெற்றுக்கொள்ளுவதன்மேல், கலெக்டரானவர் - அந்த ரிடர்ன் எந்தக் கால அளவுக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்தக் கால அளவு விஷயமாய்ச் செலுத்தப்படத்தக்க பஞ்சு வரியை விதிக்கவேண்டும் ; மேலும், அந்தத் தொகை ஏற்கனவே செலுத்தப்பட்டிராவிட்டால், அவர் - யந்திர சாலையின் சொந்தக்காரருக்கு நோடிஸ் சேர்ப்பித்து, விதிக்கப்பட்ட தொகையை அந்த நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பத்து தினங்களுக்குள் செலுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யவேண்டும்.

(2) யாதொரு யந்திரசாலையின் சொந்தக்காரர் 6-வது பிரிவில் குறிப்பிடப்பட்ட ரிடர்னைச் சரியான காலத்தில் சவதரிக்கத் தவறிப்போனாலும், சரியானதல்லவென்றாவது பூர்த்தியானதல்லவென்றாவது கலெக்டர் நம்புவதற்கு நியாயமிருக்கிற யாதொரு ரிடர்னை சவதரித்தாலும், கலெக்டரானவர் - அவரால் செலுத்தப்படத்தக்க தொகையை, நிர்ண யிக்கப்படக்கூடிய மாதிரி ஏதாவதிருந்தால் அம்மாதிரியாக விதிக்கவேண்டும்; அதன்மேல், (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகள் - சொந்தக்காரரால் சவதரிக்கப்பட்ட ரிடர்னை ஆதாரமாகக் கொண்டு ஷை வரி விதிக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே பிரயோகப்படும்:

ஆனால், சரியானதல்லவென்றாவது பூர்த்தியானதல்லவென்றாவது தாம் நம்புவதற்கு நியாயமிருக்கிற யாதொரு ரிடர்ன் விஷயத்தில், கலெக்டரானவர் - ஷை ரிடர்ன் சரியான தென்றும் பூர்த்தியானதென்றும் ருஜூ செய்ய சொந்தக்காரருக்கு நியாயமான அவகாசம் கொடுக்காமலே, அந்த ரிடர்னை ஆதாரமாகக்கொண்டு விதிக்கக்கூடிய தொகைக்கு அதிக மாயுள்ள ஒரு தொகை அளவுக்கு வரி விதிக்கக்கூடாது.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான யாதொரு நோடிஸை, யந்திரசாலையின் சொந்தக்காரருக்குத் தபால் மூலமாக அனுப்பியாவது, யந்திரசாலையில் சொந்தக்காரரிடத் திலாகிலும் அவருடைய ஏஜென்டிடத்திலாகிலும் ஒப்பித்தாவது கொடுப்பதாகக் காட்டி யாவது சேர்ப்பிக்கலாம்.

ஏற்றுமதி செய்யப்படும் பஞ்சுக்கு வரி வசூல் செய்வது.

8. கடல்மார்க்கமாய் ஏற்றுமதி செய்யப்படும் பஞ்சின் விஷயத்தில், பிரஸ்தாப வரியைக் கஸ்டம் கலெக்டரானவர் ஏற்றுமதி செய்யப்படும் தீர்வையுள்ள ரேவில் விதித்து வசூலிக்கவேண்டும்; மேலும், அந்த வரியானது - இந்த ஆக்டிலும் அதன்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகளிலும் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, 1878-ம் 1878-ம் வருஷத்து 8-வது ஆக்ட்.
வருஷத்து ஸீ கஸ்டம் ஆக்டின் சகல காரியங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காகவாவது கஸ்டம் தீர்வையாயிருப்பதாகக் கருதப்படும்.

வரி விதித்தது முடிவானதாகுமென்பதும் செலுத்தப்படாத வரியை வரப்பற்றிக்கொள்வதும்.

9. (1) 7-வது பிரிவிலாவது 8-வது பிரிவிலாவது கண்ட நிபந்தனைகளின்படி விதிக்கப்பட்ட வரியைக் குறித்து எந்தக் கோர்ட்டிலும் ஆட்சேபனை செய்யக்கூடாது.

(2) 7-வது பிரிவின்படி விதிக்கப்பட்ட வரியினால் துன்பமடைந்திருக்கும் யாதொரு யந்திரசாலையின் சொந்தக்காரர் - அந்தப்படி வரி விதித்திருப்பதை ரத்து செய்யவேண்டுமென்றாவது திருத்தவேண்டுமென்றாவது ஷை பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில் குறிப்பிட்டிருக்கும் நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து மூன்று மாதத்துக்குள் பிரதேச கவர்ன்மெனடாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; மேலும், அந்தப்படி விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல், பிரதேச கவர்ன்மெண்டார் - வரி விதித்திருப்பதை ரத்துசெய்தாகிலும் திருத்தியாகிலும, சந்தர்ப்பத்துக்கேற்றபடி அதன் பிரகாரம் செலுத்தப்பட்ட தொகை முழுவதையுமாயினும் அதன் யாதொரு பாகத்தையாயினும் ஷை சொந்தக்காரருக்கு வாபஸ் செய்யும்படி கட்டளையிடலாம்.

(3) 7-வது பிரிவின்படி வசூலிக்கப்படத்தக்க யாதொரு தொகையை நிலத்தீர்வை பாக்கியைப்போல் வசூலிக்கலாம்.

யந்திரசாலைகளைப் பார்வையிட்டு ரெகார்டுகளுக்கும் கணக்குகளுக்கும் நகல் எடுத்துக்கொள்ள அதிகாரம்.

10. (1) கலெக்டராவது இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் பொதுவான அல்லது விசேஷ உத்தரவுமூலமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராவது - வேலை செய்யும் மணி நேரங்களில் நியாயமான சகல காலங்களிலும் யாதொரு யந்திர சாலைக்குள்ளாகிலும் யாதொரு யந்திரசாலையின் யாதொரு பாகத்துக்குள்ளாகிலும் தாராளமாய்ப் போவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

(2) கலெக்டராவது அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தராவது - யாதொரு ரிடர்ன் சரியாயிருக்கிறதாவென்று பரிசோதித்தறியும் காரியத்துக்காகவாகிலும் இந்த ஆக்டின் அல்லது அதன்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகளின் காரியங்களுக்காக எந்த விவரங்கள் சம்பந்தமாய்த் தகவல் வேண்டியிருக்கிறதோ அந்த விவரங்களைக் குறித்துத் தெரிந்துகொள்ளும் காரியத்துக்காகவாகிலும் சொந்தக்காரருக்கு நோடிஸ் கொடுத்தாயினும் கொடுக்காமலாயினும் யாதொரு யந்திரசாலையின் வேலை செய்வதைக் குறித்த ரெகார்டுகளையும் (தஸ்தவேஜுகளையும்) விற்பனை சம்பந்தமான ரெகார்டுகளையும் கணக்குகளையும் எந்தக் காலத்திலாகிலும் பரிசோதனைசெய்து, அந்த ரெகார்டுகள் அல்லது கணக்குகள் எல்லாவற்றிற்குமாவது அவைகளில் எதற்காவது நகல்கள் எடுத்துக்கொள்ளலாம் அல்லது அவைகளிலிருந்து எக்ஸ்ட்ராக்டுகள் எடுத்துக்கொள்ளலாம்.

(3) கலெக்டரல்லாத வேறே யாதொரு உத்தியோகஸ்தர் யாதொரு வியாபார முறையின் விவரமாவது சூத்திரங்களாவது அடங்கியுள்ள யாதொரு ரெகார்ட் அல்லது கணக்கை (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பரிசோதனை செய்ய உத்தேசித்தால், ஷை யந்

திரசாலையின் சொந்தக்காரர் - கலெக்டருக்கு அனுப்பப்படுவதற்காக ஆட்சேபனை நோடிஸ் ஒன்றை ஷை உத்தியோகஸ்தரிடத்தில் கொடுக்கலாம் ; அதன்மேல், அந்த உத்தியோகஸ்தர் - கலெக்டரின் உத்தரவு கிடைக்கிறவரையில் ஷை ரெகார்ட் அல்லது கணக்கை முத்திரைபோட்டு வைக்கவேண்டும்.

தெரிந்துகொள்ளப்பட்ட சங்கதிகளை அந்தரங்கமானவையாக பாவிக்கவேண்டுமென்பது.

11. (1) மேலேகண்ட சகல நகல்களையும் எக்ஸ்ட்ராக்டுகளையும், யாதொரு கலெக்டராலாவது வேறே யாதொரு உத்தியோகஸ்தராலாவது யாதொரு யந்திரசாலை அல்லது கிடங்கைப் பார்வையிட்டது மூலமாகவாகிலும் இந்த ஆக்டின்படி அனுப்பப்பட்ட யாதொரு ரிடர்ன் மூலமாகவாகிலும் தெரிந்துகொள்ளப்பட்ட சகல சங்கதிகளையும் அந்தரங்கமானவைகளாக பாவிக்கவேண்டும்.

(2) கலெக்டராவது அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தராவது மேலே சொல்லப்பட்டபடிக்குள்ள யாதொரு சங்கதியைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொள்ளாமல் தங்களுக்கு மேற்பட்ட உத்தியோகஸ்தரல்லாத வேறே யாதொரு நபருக்கு வெளியிட்டால், அவர் - ஆறு மாதத்துக்கு மேற்படாமல் காவல் தண்டனை விதிக்கப்படத்தக்கவராவதுமல்லாமல், அபராதம் விதிக்கப்படுவதற்குங்கூட உள்ளாவார் :

ஆனால், இந்தப் பிரிவில் கண்டதெதுவும்-இந்த ஆக்டின்படி தப்பான ரிடர்ன் அனுப்பினது விஷயமாய்ப் பிராது தொடரும் காரியங்களுக்காக அப்படிப்பட்ட யாதொரு சங்கதியை வெளியிடுவதற்குப் பிரயோகப்படமாட்டாது.

வரியிலிருந்து கிடைக்கும் பணத்தை உபயோகப்படுத்துவது.

12. (1) ஒவ்வொரு மாதத்தின் கடைசி தினத்திலாவது அதற்குப் பிறகு சௌகரியமாயிருக்கக்கூடிய அவ்வளவு சீக்கிரத்திலாவது, அந்த மாதத்தில் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட வரித்தொகையை, வசூலிப்பதற்கும் வரப்பற்றிக்கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட செலவுகள் எவையேனும் இருந்தால் அவைகளைக் கழித்துவிட்ட பிறகு ஷை கம்மிட்டியாரிடத்தில் கொடுத்துவிடவேண்டும்.

(2) நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு, ஷை தொகையையும் கம்மிட்டியாரால் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட வேறே எவையேனும் பணத்தொகைகளையும், கம்மிட்டியாரின் செலவுகளையும், இந்தியாவில் பஞ்சு சம்பந்தமான கைத்தொழிலின் நன்மையை உத்தேசித்து விவசாய ஆராய்ச்சியையும் கைத்தொழில் சாஸ்திரசம்பந்தமான ஆராய்ச்சியையும் அபிவிருத்தி செய்வதற்காக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அங்கீகாரத்தை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, அந்தக் கம்மிட்டியார் செய்யத் தீர்மானிக்கும் ஏற்பாடுகளுக்காகப் பிடிக்கும் செலவையும் செய்வதற்கு உபயோகிக்கவேண்டும்.

சட்டப்படி செலாவணியாகும்படிச் செய்வது.

13. இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு காரியம் அல்லது நடத்தப்பட்ட யாதொரு நடவடிக்கையைப்பற்றி, ஷை கம்மிட்டியிலாவது ஸ்டாண்டிங் பைனான்ஸ் ஸப் கம்மிட்டி என்னும் திரவிய சம்பந்தமாய் நிலையான ஸப் கம்மிட்டி ஏதாகிலும் இருந்தால் அதிலாவது யாதொரு காலி ஸ்தானம் இருக்கிறதென்னும் அல்லது அதன் அமைப்பில் யாதொரு குறைவு இருக்கிறதென்னும் மூகாந்தரத்தைக்கொண்டுமாத்திரமே ஆட்சேபனை செய்யக்கூடாது.

கம்மிட்டியைக் கலைத்துவிடுவது.

14. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இந்தியா கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், அந்த விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய தேதியிலிருந்து ஷை கம்மிட்டி கலைத்துவிடப்படுமென்று பிரசித்தம் செய்யலாம் ; அந்தப்படி பிரசித்தம் செய்யப்படுவதன்மேல், அந்தக் கம்மிட்டியாரிடம் சங்கிரமித்திருக்கும் சகல நிதிகளும் வேறே சொத்தும் மஹாராஜ சக்ரவர்த்தியவர்களிடம் சங்கிரமிக்கும் ; மேலும், இந்த ஆக்ட் ரத்து செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

விதிகள் செய்ய ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்குள்ள அதிகாரம்.

15. (1) இந்த ஆக்டில் கண்ட சகல நிபந்தனைகளையுமாவது அவைகளில் எதையாவது அமுலுக்குக் கொண்டுவரும் காரியத்துக்காக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாயும், முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு பாதகமில்லாமலும், அப்படிப்பட்ட விதிகளில் அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காகவாவது நிபந்தனை ஏற்படுத்தலாம் ; அவையாவன :—

(a) முதல்தடவையிலாகிலுஞ்சரி காலி ஸ்தானங்கள் ஏற்படுவதன்மேலாகிலுஞ்சரி 4-வது பிரிவின்படி இன்ன காலத்துக்குள் நேமகங்கள் செய்யப்படவேண்டுமென்பதை நிர்ணயிப்பது ;

(b) கம்மிட்டி மெம்பர்களின் உத்தியோக கால அளவை நிர்ணயிப்பது ;

(c) இன்ன சந்தர்ப்பங்களிலும் இன்ன அதிகாரியாலும் யாதொரு மெம்பர் நீக்கி விடப்படலாமென்பதை நிர்ணயிப்பது;

(d) யாதொரு வருஷத்தில் கம்மிட்டியார் குறைந்தது இத்தனை சபைகள் கூட வேண்டுமென்பது;

(e) நடத்தப்பட்ட சகல வேலையைக்குறித்தும் கம்மிட்டியார் ரெகார்ட் வைத்து வருவதும், அப்படிப்பட்ட ரெகார்டுகளுக்கு நகல்களை ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு அனுப்புவதும்;

(f) கம்மிட்டியின் அதிகாரங்களையும், கம்மிட்டியாரைக் கட்டுப்படுத்தும்படியான ஒப்பந்தங்கள் செய்துகொள்ள ஸெக்ரெடரிக்குள்ள அதிகாரங்களையும் வரையறுப்பதும், அந்த ஒப்பந்தங்களை இன்ன விதமாய் எழுதிமுடிக்கவேண்டுமென்பதும்;

(g) கம்மிட்டி மெம்பர்களின் பிரயாண வர்த்தனைகளைக் குறித்தும் அவர்களுக்குப் பிரதிபலன் ஏதாகிலும் கொடுக்கப்படுமானால் அதைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவது;

(h) கம்மிட்டியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமிப்பது, அவர்களுக்கு உயர்ந்த உத்தியோகம் கொடுப்பது, அவர்களைத் தள்ளிவிடுவது ஆகிய இவைகள் விஷயமாயும், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் அல்லது ஊழியக்காரர்களின் உத்தியோகங்களை ஏற்படுத்துவது எடுத்துவிடுவது ஆகிய இவைகள் விஷயமாயும் கம்மிட்டிக்கும் ஸெக்ரெடரிக்குமுள்ள அதிகாரங்களை வரையறுப்பது;

(i) கம்மிட்டியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் சம்பளமும் ரஜாவும் கொடுப்பதைக்குறித்தும், அந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் ரஜா வர்த்தனைகள் கொடுப்பதைக்குறித்தும், ரஜா கொடுக்கப்பட்டிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரருக்கு பர்த்தியாக வேலை பார்க்க நியமிக்கப்பட்ட யாதொரு நபருக்குக் கொடுக்கப்படும் பிரதிபலனைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்துவது;

(j) கம்மிட்டியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் பென்ஷன் என்னும் உபகாரச் சம்பளமும் க்ராட்யூடி என்னும் நன்கொடைத் தொகையும் தயாவிஷயமாய்க் கொடுக்கும் வர்த்தனைகளும் பிரயாண வர்த்தனைகளும் கொடுப்பதைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவது;

(k) கம்மிட்டியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்காகவும் ஊழியக்காரர்களுக்காகவும் ப்ராவிடென்ட் பண்ட் என்னும் எதிர் கால சகாய நிதி ஏற்படுத்துவதையும் அதைப் பராமரித்துவருவதையும் நிர்ணயிப்பதும், கம்மிட்டியாரிடத்தில் சிறிதுகாலம் ஊழியம் செய்யும்படி அனுப்பப்பட்டோ அல்லது அவர்களிடத்தில் ஊழியம் செய்யும்படி ட்ரான்ஸ்பர் பண்ணப்பட்டோ இருக்கும் கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களல்லாத வேறே உத்தியோகஸ்தர்கள் ஊழியக்காரர்கள் ஆகிய இவர்களுடைய சம்பளத்திலிருந்தும் வர்த்தனைகளிலிருந்தும் ஷை ப்ராவிடென்ட் பண்டுக்குச் சந்தாத்தொகைகளைக் கழிப்பதும்;

(l) கம்மிட்டியின் வருஷவாரி வரவையும் செலவையும் குறித்த பட்ஜெட் எஸ்டிமேட் என்னும் வரவுசெலவு திட்டக்கணக்குகளையும் பட்ஜெட் எஸ்டிமேட்டுகளில் சேர்க்கப்படாத செலவைக்குறித்த உடன்சேர்க்கையான எஸ்டிமேட்டுகளையும் தயார் செய்வதையும், அந்த எஸ்டிமேட்டுகளுக்கு இன்ன மாதிரியாக அனுமதி கொடுத்து அவைகளைப் பிரசித்தம் செய்யவேண்டுமென்பதையும் நிர்ணயிப்பது;

(m) கம்மிட்டியின் நிதிகளை யாதொரு விஷயத்துக்குச் செலவு செய்வதற்காக பட்ஜெட் எஸ்டிமேட்டுகளிலாவது ஒரு தலைப்பிலிருந்து மற்றொரு தலைப்புக்குத் தொகை எடுத்துக்கொள்வது மூலமாகவாவது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி செய்யப்பட்டிராவிட்டாலுஞ்சரி அந்தச் செலவு விஷயமாயும், செலவைக்குறித்த பட்ஜெட் எஸ்டிமேட்டுகளில் மிகுதி நிற்கக்கூடுமென்று உத்தேசிக்கப்படும் தொகைகளை ஒரு தலைப்பிலிருந்து மற்றொரு தலைப்புக்கு எடுத்துக்கொள்வது விஷயமாயும் முறையே கம்மிட்டியார், திரவிய சம்பந்தமான நிலையான ஸப் கம்மிட்டி ஏதாவதிருந்தால் அந்தக் கம்மிட்டியார், ப்ரெஸிடென்ட், ஸெக்ரெடரி ஆகிய இவர்களின் அதிகாரங்களை வரையறுப்பது;

(n) கம்மிட்டியின் வரவு செலவுக் கணக்குகள் வைத்துவருவதை நிர்ணயிப்பதும், அந்தக் கணக்குகளைத் தணிக்கைசெய்வதற்காக ஏற்பாடு செய்வதும்;

(o) கம்மிட்டியாராவது அவர்கள சார்பிலாவது இன்ன மாதிரியாய்த் தொகைகள் கொடுக்கப்படவேண்டுமென்பதையும், கம்மிட்டியின் நிதிகளைக் கட்டிவைப்பதற்காவது ஈடுகளின்மேல் போட்டுவைப்பதற்காவது வாங்குவதற்காவது ஒருவகை செய்வதற்காவது எழுதப்படும் உத்தரவுகளில் இன்ன உத்தியோகஸ்தர்கள் கையெழுத்து போடவேண்டுமென்பதையும் நிர்ணயிப்பது;

(p) கம்மிட்டியின் நடைமுதல் கணக்கை இன்னபடி பந்தோபஸ்தாய் வைத்திருக்கவேண்டுமென்பதையும், கம்மிட்டிக்கு வரவாக மிகுதியாயிருக்கும் பணத்தொகை

களை இன்ன பாங்கி அல்லது பாங்கிகளில் வட்டிக்குப் போட்டுவைக்கலாமென்பதையும், இன்ன திட்டங்களின்படி அந்தத் தொகைகளை மற்றப்படி ஈடுகளின்மேல் போட்டுவைக்கலாமென்பதையும் நிச்சயிப்பது;

(q) ஆராய்ச்சி வேலையின்பொருட்டு செலவு செய்வதற்காக மாகாண விவசாய இலாகாக்களுக்காவது கம்மிட்டியாரின் நேர்விசாரணையிலிராத ஸ்தாபனங்களுக்காவது பங்கிடுசெய்யப்பட்ட தொகைகளையும், வாஸ்தவமாய்ச் செய்யப்பட்ட செலவையும், கொடுக்கவேண்டிய கடன் தொகைகள் எவையேனுமிருந்தால் அவைகளையும், செலவாகாமல் வருஷமுடிவில் கையிருப்பிலிருக்கும் தொகைகளை ஒருவகை செய்திருப்பதையும் காட்டும் ஒரு ஸ்டேட்மென்டைத் தயார் செய்வதை நிர்ணயிப்பது;

(r) கடல் மார்க்கமாக ஏற்றுமதி செய்யப்படும் பஞ்சு விஷயமாய்ப் பஞ்சு வரி விதிப்பதும் வசூலிப்பதும் செலுத்துவதும்;

(s) நிர்ணயிக்கப்படவேண்டிய அல்லது நிர்ணயிக்கப்படக்கூடிய வேறே யாதொரு விஷயம்.

விதிகள்செய்ய கம்மிட்டியாருக்குள்ள அதிகாரம்.

16. கம்மிட்டியார் - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவுமாவது அவைகளில் ஏதற்காகவாவது இந்த ஆக்டுக்கும் 15-வது விதியின்படி செய்யப்பட்ட எவையேனும் விதிகளுக்கும் பொருத்தமாயுள்ள விதிகள் செய்யலாம்; ஷை விஷயங்கள் எவையென்றால் :—

(a) ஸ்டாண்டிங் பைனான்ஸ் ஸப் கம்மிட்டி ஒன்றை ஏற்படுத்துவதும், இந்த ஆக்டின்படி கம்மிட்டியாரால் செலுத்தப்படத்தக்க எவையேனும் அதிகாரங்களை அந்த ஸப் கம்மிட்டிக்குப் பிரித்துக்கொடுப்பதும்;

(b) ஸ்டாண்டிங் பைனான்ஸ் ஸப் கம்மிட்டியைச் சேர்ந்த மெம்பர்களை இன்ன விதமாய் நியமிக்கவேண்டுமென்பதையும் நீக்கவேண்டுமென்பதையும் ஒருவருக்கு பர்த்தியாக மற்றொருவரை இன்ன விதமாய் ஏற்படுத்தவேண்டுமென்பதையும், அவர்களுடைய உத்தியோக கால அளவையும் நிர்ணயிப்பதும், அந்த ஸப் கம்மிட்டியில் ஏற்படும் காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்வதும்;

(c) கம்மிட்டியாரும் ஸ்டாண்டிங் பைனான்ஸ் ஸப் கம்மிட்டியாரும் சபை கூடும் தேதிகளையும் காலங்களையும் இடங்களையும் நியமிப்பதும், அந்த சபைகளில் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறை விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதும்;

(d) கம்மிட்டியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களிடமிருந்தும் ஊழியக்காரர்களிடமிருந்தும் இன்ன சந்தர்ப்பங்களில் ஜாமீன் கேட்கலாமென்பதையும், ஒவ்வொரு விஷயத்திலும் அப்படிப்பட்ட ஜாமீன் இவ்வளவு இருக்கவேண்டுமென்பதையும் இன்ன மாதிரியாய் இருக்கவேண்டுமென்பதையும் நிச்சயிப்பது;

(e) ப்ராவிடென்ட் பண்டிலிருந்து இன்ன காலங்களிலும் இன்ன சந்தர்ப்பங்களிலும் தொகைகள் கொடுக்கப்படலாமென்பதையும், அந்தப்படி கொடுக்கப்படும் தொகைகள் இன்ன திட்டங்களின்மேல் ஷை பண்டைப் பின்னும் பொறுப்பினின்றும் விடுதலை செய்யவேண்டுமென்பதையும் நிச்சயிப்பது;

(f) கம்மிட்டியாரின் நிதிகளிலிருந்து ப்ராவிடென்ட் பண்டுக்குச் செலுத்தத்தக்க ஏதாவது சகாயத் தொகையை நிச்சயிப்பது;

(g) ப்ராவிடென்ட் பண்டுக்கும் அதை ஈடுகளின்மேல் போட்டுவைப்பதற்கும் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களைக் குறித்தும் பொதுவாய் ஒழுங்கேற்படுத்துவது;

(h) கம்மிட்டியின் ஸெக்ரெடரியினுடைய அதிகாரங்களையும் கடமைகளையும் வரையறுப்பது.

விதிகளைப் பிரசித்தம் செய்வது.

17. 15-வது பிரிவின்படியாவது 16-வது பிரிவின்படியாவது செய்யப்படும் சகல விதிகளையும் இந்தியா கெஜெட்டில் பிரசித்தம் செய்யவேண்டும்; அந்தப்படி பிரசித்தம் செய்யப்படுவதன்மேல், அவை - இந்த ஆக்டில் விதிக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

எச். மான்க்ரீப் ஸ்மித்,

இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation).

C. N. SARAVANA MUDALIYAR,

Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.